02.02.2026 OS.No.74/2022 PW1 Name :.**மாணிக்கம்**

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் பற்றி ஓரளவிற்கு எனக்கு தெரியும். தாவா சொத்து ஜாகிர் இனாம் சொத்து என்பதற்கு ஆவணங்கள் போட்டுள்ளேன். அன்சர்பாஷா என்பவர் தர்வஸ் பாய் என்பவரின் மகனும் குல்சார்பேகமின் கணவர் ஆவார். அன்சர்பாஷா வகையரா தாவா சொத்தில் வசித்து வந்துள்ளார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அன்சர்பாஷா வாரிசுகள் வழக்கு சொத்தை அனுபவித்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.
2. அ.வ.எண். 26/2015 வழக்கில் கிருஷ்ணன் தரப்பினராக இருந்தார். தாவா சொத்து தற்போதும் காலிமனையாக தான் உள்ளது. தாவா சொத்தில் தற்போது வீடு மின் இணைப்பு உள்ளது என்றும் அதில் பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடுவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. அ.வ.எண்.26/2015 வழக்கின் தீர்ப்பு நகலை வழக்கறிஞர் கொடுத்துள்ளேன்.
3. வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்று தெரியவில்லை. அ.வ.எண்.26/2015ல் வழக்கில் நான் தரப்பினர் இல்லை. அன்சர்பாஷாவிற்கு மொத்தம் 4 வாரிசுகள். அவர்கள் 4 பேரும் சேர்ந்து தான் எனக்கு கிரையம் கொடுத்தார்கள். அவ்வாறு கிரையமும்

சுவாதீனமும் எனக்கு கொடுத்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆவணத்திற்கு முன்னர் சொத்து குறித்து பிரதிவாதிகள் பெயருக்கு ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 04.12.2020ல் என் பெயரில் பத்திரம் ஏற்பட்டது. பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்கள் 02.12.2020ல் ஏற்பட்டுள்ளதாக வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆவணங்கள் உள்ளது.

4. நான் கிரையம் வாங்கிய சொத்து 3000 சதுரடியாகும். அதில் பிரதிவாதிகளிடம் எந்த சுவாதீனமும் இல்லை. பிரதிவாதிகள் பெயரில் உள்ள ஆவணத்தில் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என்னுடைய பெரியம்மா மகன். 1ம் பிரதிவாதியின் மகன்கள் 2, 3 பிரதிவாதிகள். பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விவரம் மேற்படி ஆவண தேதிக்கு சுமார் 2,3 நாட்கள் கழித்து எனக்கு தெரிந்தது.

5. நான் சொத்தை வாங்குவதற்கு முன் வில்லங்க சான்றிதழ் பார்த்துதான் சொத்து வாங்கினேன். அந்த வில்லங்க சான்றை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு வில்லங்க சான்று எதுவும் வாங்காமல் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆவணம் பற்றி வழக்கு மூலமாக தெரிந்துக்கொண்டேன் என்று வழக்குரையில் நான் சொல்லவில்லை. பிரதிவாதிகள் அவர்களுடைய பதிலில் வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தம் என கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. குல்சார்பேகம் நீதிமன்ற தீர்ப்பை வைத்து சொத்தை எனக்கு கொடுத்தார்.

6. அன்சர்பாஷாவின் மற்ற வாரிசுகளிடம் நான் கிரையம் வாங்கவில்லை. மீண்டும் சாட்சி அவர்களிடம் கையெழுத்து பெற்றுள்ளதாக கூறுகிறார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். குல்சார்பேகம் பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக வழக்கு போட்டுள்ளார். குல்சார்பேகம் பெற்றுள்ள நீதிமன்ற தீர்ப்பு ஒருதலைபட்சமானது என்பது எனக்கு தெரியது. குல்சார்பேகம் தாக்கல் செய்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டியிருந்தார் என்பது எனக்கு தெரியாது. குல்சார்பேகம் வழக்கில் அவருக்கு உரிமை விளம்புகை பரிகாரம் கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ3 ஆவணத்தில் 20ம் பக்கத்தில் அது குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யபட்டுள்ளது. அது நிலுவையில் உள்ளது. அந்த வழக்கின் தீர்ப்பாணை நகல் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. குல்சார்பேகம் வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பகுதியாக தள்ளுபடி செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. குல்சார்பேகம் தாக்கல் செய்த வழக்கின் சர்வே எண் என்னால் கூறமுடியாது.

8. என்னுடைய ஆவணத்தில் சர்வே எண்.2/3 பி என குறிப்பிட்டுள்ளேன். வருவாய் துறை ஆவணத்தில் இல்லாத சர்வே எண்ணை நான் என்னுடைய ஆவணத்தில் கூறியுள்ளேன் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் சரிபார்த்து தான் அதை போட்டுள்ளேன். தற்போதும் அது நடைமுறையில் உள்ளது. நான் என்னுடைய பத்திரத்துடன் இணைத்த மனைவரி தோராய பட்டா நகல் போலியானது என்று சொன்னால்

சரியல்ல. நத்தம் சொத்து தொடர்டபாக கணிணி சிட்டா வந்துள்ளது தெரியும்.

9. இன்றைய தேதியில் சர்வே எண்.2/3பி க்கு கணினி சிட்டா வாங்கி வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். குல்சார்பேகம் குடியாத்தத்தில் இருக்கிறார். இடத்தை கிரையம் கொடுத்த பின்னர் அங்கு போய்விட்டார். குல்சார்பேகத்திற்கும் எனக்கும் தற்போதும் நல்ல பேச்சுவார்த்தை உள்ளது. என்னுடைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் கூரை வீடு இருந்தது என எழுதபட்டு பின்னர் அது தரைமட்டம் ஆக்கபட்டது என சுருக்கி எழுதபட்டுள்ளது. அதற்கு காரணம் என்னால் கூறமுடியாது. தாவா சொத்தில் குடிநீர் இணைப்புகூட உள்ளது என்றால் இல்லை.

10. தாவா சொத்தை ஒட்டி 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து தற்போதும் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் சிறிது தள்ளி எனக்கு வேறு சொத்து உள்ளது. குல்சர்பேகம் பட்டா தவறு என பதிலில் கூறபட்டுள்ளதை நான் சரிபார்க்கவில்லை. 17.03.2022 தேதி வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் பட்டா ரத்து உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யபட்டுள்ளது. குல்சார்பேகம் செய்துள்ளார். அந்த விவரத்தை என்னுடைய முதன்மை சாட்சியத்தில் கூறவில்லை.

11. பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதை நான் இடையூறு செய்ததாக கூறி காவலூர் காவல்நிலையத்தில் அவர்கள் புகார் கொடுத்தார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. நான்தான் அவர்கள் மீது புகார் கொடுத்தேன். அந்த விவரத்தை வழக்கில் கூறவில்லை. வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன்.

காவல்துறையில் நடந்த விசாரணையில் நீதிமன்றம் மூலமாக தீர்வு கண்டு கொள்ளுமாறு கூறினார்கள். குல்சார் பேகத்திற்கு சொத்தில் உரிமை இல்லை. நீதிமன்றம் கூறிய பின்னர் அதன் அடிப்படையில் நான் பத்திரம் செய்துள்ளது தவறானது என்றால் சரியல்ல. குல்சார்பேகம் வழக்கிற்கு எதிராக எந்த ஒரு மேல்முறையீடும் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் குல்சார்பேகம் கொடுத்ததால் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 பட்டா தவறானது என உத்தரவு பிறப்பித்ததற்கு அதற்கு எதிராக தான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்.

12. என்னுடைய பெயரில் பத்திரம் பதிவான பின் சார்பதிவாளர் அலுவலர் வந்து சொத்தை பார்க்கவில்லை. வா.சா.ஆ.4, வா.சா.ஆ. 5 ஆவணங்கள் நீதிமன்ற தீர்ப்பு வந்த பின்னர் அதை தெரிந்துக்கொண்டு தானம் கொடுத்ததால் தவறு என கூறுகிறேன். சர்வேச எண். 2/3 சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் நத்தம் நிலவரி திட்ட பட்டா வழுங்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் பின்னர் தான் 2/3பி என மோசடியாக பட்டா உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு செல்லாது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 02/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B
SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.03 17:38:47 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.